O.S.No. : 86/2021

Dated: 09.10.2025

**வா.சா.2: ரவி: த/பெ. சிக்கையா**

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். யார் கூறியதன் அடிப்படையில் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் வாதி சிவராஜ் கூறியதன் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன். வாதி சிவராஜ் என்னுடன் பணிபுரியும் நபரா என்றால் இல்லை, அவர் எனது தோட்டத்திற்கு பக்கத்தில் தோட்டத்தில் உள்ள நபர் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் கூறியதன் அடிப்படையில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

2. நான் வாதியின் தோட்டத்திற்கு அருகில் உள்ளதை காண்பிக்கவும், முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் முகவரியில் நான் வசிப்பதை காண்பிக்கவோ இந்த வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் குடியிருக்கும் வீடானது எந்த சர்வே எண்ணில் உள்ள நிலத்தில் அமைந்துள்ளது என்றால் பழைய சர்வே எண் 97/1-ல் அமைந்துள்ளது. அதற்கான புதிய சர்வே எண் என்ன என்றால் எனக்கு அது தற்போது ஞாபகம் இல்லை. வாதியின் பூமியின் பழைய மற்றும் புதிய சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண் 105/1 ஆகும், புதிய சர்வே எண் எனக்கு தெரியவில்லை. பழைய சர்வே எண் 105/1-ற்கு தற்போது பல புதிய சர்வே எண்கள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி சிவராஜின் பூமியின் புதிய சர்வே எண் என்ன என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது.

3. வாதியின் பூமியின் நான்கு எல்லைகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பூமியின் புதிய சர்வே எண் படியான நான்கு எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் வாதியின் தோட்டத்திற்கு அருகிலும், வாதியின் பூமியில் உள்ள சர்வே எண் கொண்ட பூமியிலும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் வாதியின் பூமிக்கு அருகில் பூமி வைத்திருந்தால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் மேற்படி ஆவணங்களை நான் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4. வாதி என்னிடம் கூலி வேலை செய்து வரும் நபர் என்பதால் வாதி கேட்டுக்கொண்டதன் பெயரிலும், வாதியின் வழக்கறிஞர் சொல்லி கொடுத்ததன் அடிப்படையிலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் வாதியின் தோட்டத்திற்கு அருகில் இருந்திருந்தால் சரியான சர்வே எண்கள் மற்றும் செக்குபந்தியை கூறியிருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:** இல்லை

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2025.10.09 19:35:06 +0530